# இலங்கை இன்கலைச் சங்கம்

# அமைப்பு சாசனம்

---

## CONSTITUTION

---

## ILANKAI INKALAI SANGAM
(THE FINE ARTS SOCIETY OF CEYLON)

<u>அமைப்பு சாசனம்</u>

# இலங்கை இன்கலைச் சங்கம்

## <u>பெயர்</u>

<u>விதி : ஒன்று</u>

இச் சங்கம் இலங்கை இன்கலைச் சங்கம் என அழைக்கப்படும்.

## <u>குறிக்கோள்கள்</u>

<u>விதி : இரண்டு</u>

1. தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் இன்கலைகளான இசை (சாத்திர இசையும் மெல்லிசையும்) நடனம், நாடகம், ஓவியம், சிற்பம், கவிதை முதலிய கலைகளைப் பாதுகாத்தல், பேணி வளர்த்தல், அபிவிருத்தி செய்தல்.

2. அங்கத்தவர்களினதும் மற்றும் பொது மக்களினதும் நலனுக்காக பெயர்பெற்ற கலைஞர்களின் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நடத்தல்.

3. உள்நாட்டுக் கலைஞர்களைக் கௌரவித்தல், ஊக்கப்படுத்துதல்.

4. கலைகளைத் தொழிலாகக் கொள்ளாத கலைஞர்களை ஊக்குவித்தல், பாட வகுப்புகள், போட்டிகள் மூலமாக அவர்களுடைய திறமையை வளர்த்துக்கொள்ள வாய்ப்புகள் அளித்தல்.

5. இன்கலைத் துறையில் பயிலும் வசதியளித்தல்.

6. சொற்பொழிவுகள், பொருட்காட்சிகள், முதலியவைகள் மூலம் பலவகையான இன்கலைகள் பற்றிய அறிவை வளர்த்தல், பரப்புதல்.

## அங்கத்துவம்

விதி : மூன்று

1. சங்கத்தில் எல்லோரும் அங்கத்தவராகலாம்.

2. அங்கத்தவராவதற்குள்ள விண்ணப்பம் செயற்குழுவினாற் குறிக்கப்பட்ட பத்திரத்தில் கௌரவ செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

3. விண்ணப்பம் ஒரு அங்கத்தவரால் பிரேரிக்கப்படல் வேண்டும்

4. எந்த விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் உரிமை செயற்குழுவிற்குண்டு.

5. விதி ஏழு 2ல் கூறப்பட்ட செயற்குழு அங்கத்தவரல்லாத எந்த அங்கத்தவரும் விதி நான்கு 2ல் கூறப்பட்டுள்ளபடி இந்த சாசனத்தையோ அல்லது சங்கக் கடமைகளையோ மீறிய குற்றத்தைச் செய்திருப்பதாகச் செயற்குழுவாற் காணப்பட்டால் அக்குழுவால் வெளியேற்றப்படுவதற்கு உள்ளாவார். அப்படி வெளியேற்றப்படுவதற்கு இலக்கான எந்த அங்கத்தவருக்கும். அடுத்து வருகின்ற ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்குக் குறிக்கப்பட்ட திகதிக்குப் பதினன்கு நாட்களுக்குள் ஆட்சேப மனுவை கௌரவ பொதுச் செயலாளருக்கு அனுப்பி ஆட்சேபம் தெரிவிக்க உரிமையுண்டு. ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் எந்தவகையான முடிவும் இறுதியானது.

## அங்கத்தவர்களின் உரிமைகளும் கடமைகளும் மற்றும் தனிச் சலுகைகளும்

விதி : நான்கு

1. சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் இந்த விதிகளுக்குட்பட்டு சங்கத்தின் பொதுக் கூட்டங்களில் கலந்துகொள்ளவும் வாக்களிக்கவும் உரிமை உடையராவர்.

2. ஒவ்வொரு அங்கத்தவரினதும் கடமைகளாவன :-

   அ. இவ்விதிகளுக்கும் விதிகளின்படி செய்யப்பட்ட முடிவுகளுக்கும் கட்டுப்படுதல்.

   ஆ. சங்கத்தினதும் அதன் அங்கத்தவர்களினதும் நலனுக்குப் பாதகமான எவ்விதச் செயல்களையும் செய்யாதிருத்தல்.

3. அங்கத்தவர்களுக்கென பிரத்தியேகமாக சங்கத்தால் நடத்தப்படும் எல்லா நடவடிக்கைகளிலும் கலந்து கொள்ளும் உரிமை சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் உண்டு

## சந்தா விபரம்

விதி : ஐந்து

1. அங்கத்தவராவதற்குள்ள பிரவேசக் கட்டணம் ரூபா இரண்டு.

2. அங்கத்துவச் சந்தா பின்வருமாறு :—

   சாதாரண அங்கத்தவர் வருடம் ரூபா 5--00

   ஆயுட்கால அங்கத்தவர் ரூபா 150ம் அதற்கு மேலும்

3. சந்தா விகிதம் ஆண்டுப் பொதுக் கூட்டத்தாலோ அல்லது விசேட பொதுக் கூட்டத்தாலோ மாற்றப் படத் தகுந்ததாகும்.

4. அங்கத்துவ ஆண்டுச் சந்தா ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் மாத முடிவிற்குள் செலுத்தப்படல் வேண்டும்.

5 ஆண்டுச் சந்தா மூன்று மாதங்கட்குமேல் பாக்கி நிற்கும் அங்கத்தவர்கள் சங்கத்தின் உரிமைகளேயும் தனிச் சலுகைகளேயும் பெறத் தகுதியற்றவராவர்.

6. அங்கத்தவர்கள் நிதி ஆண்டு முடிவுக்குள் அதாவது செப்டம்பர் மாதம் 30ந் திகதிக்கு முன் சந்தா செலுத்தத் தவறினல் தங்கள் அங்கத்துவத்தை இழந்தவராவர். இந்த விதியின்படி அங்கத்துவத்தை இழந்த எந்த அங்கத்தவரும் தாம் சங்கத்துக்குச் செலுத்தவேண்டிய எல்லாப் பாக்கிகளும் கொடுத்துத் தீர்க்கும் வரையில் மறுபடியும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்.

## நிதியும் கணக்குகளும்

### விதி : ஆறு

1. சங்கத்தின் நிதி செயற்குழுவாற் தீர்மானிக்கப்பட்ட வங்கியிலோ, வங்கிகளிலோ சங்கத்தின் பெயரால் அடக்கப் பணமாகச் சேர்க்கப்பட்டு, தலைவர் அல்லது உபதலைவர்களில் ஒருவருடன் கௌரவப் பொருளாளர் அல்லது கௌரவ உதவிப் பொருளாளர் கையொப்பம் இடப்பட்டு வரவு செலவு செய்யப்படும்

2 அமைப்புச் சாசனத்தில் கூறப்பட்ட நோக்கங்களைச் செயலாற்றுவதற்கு அல்லாமல் வேறு எந்தக்காரியத்திற்கும் சங்கத்தின் நிதி செலவிடப்படக் கூடாது.

3 சங்கப் பொதுக்கூட்டத்தில் சங்கக் கணக்குகளைப் பரிசோதிக்கவென ஒரு கணக்குப் பரிசோதகர் நியமிக்கப்படுவார். மேற்படி பரிசோதனை ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்கு முன்பே முடிந்துவிட வேண்டும்

## பதவி வகிப்போர்களும் செயற்குழுவும்

### விதி : ஏழு

1 சங்கத்திற்கு ஒரு காப்பாளரும் இரு உப காப்பாளர்களும் இருப்பார்கள்.

2 செயற்குழு கீழ்க்கண்டவர்களைக் கொண்டதாக இருக்கும்.

அ. தலைவர்

ஆ. இரு உபதலைவர்கள்

இ. கௌரவ பொதுச் செயலாளர்

ஈ. கௌரவ உதவிப் பொதுச் செயலாளர்

உ. கௌரவ பொருளாளர்

ஊ. கௌரவ உதவிப் பொருளாளர்

எ. கீழ்க்கண்ட ஐந்து உபகுழுக்களின் செயலாளர்கள்

(i) நடனம் (iii) இசை

(ii) நாடகம் (iv) கவிதை

(v) சித்திரமும் சிற்பமும்

3. செயற்குழு ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த விதிகளுக்கடங்கி சங்கத்தின் அடுத்த செயற்குழு அங்கத்தவர் தேர்வு வரை பதவி வகிக்கும். சங்கத்தின் பொது நிர்வாகம் செயற்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும்.

4. செயற்குழுவின் கூட்டத்திற்கு குறைந்தது ஐவராவது சமுகமளித்திருக்க வேண்டும்.

5. செயற்குழு குறைந்தது மாதமொருமுறையாவது கூட வேண்டும்.

6. தகுந்த காரணமின்றி தொடர்ச்சியாக மூன்று குழுக் கூட்டத்திற்குச் சமுகமளிக்காத செயற்குழு அங்கத்தவர்கள் அப்பதவியிலிருந்து விலகிக்கொண்டதாகக் கருதப்படுவர்.

7. எந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவரும் அல்லது பதவி வகிப்பவரும் வாக்களிக்கும் உரிமையுள்ள அங்கத்தவர்களின் தொகையில் மூன்றிலிரு பங்கினரால் நேரிலோ அல்லது பதிலர்கள் (Proxy) மூலமோ நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி அல்லாமல் பதவிநீக்கம் செய்யப்படமாட்டார்கள். ஆனால் அத்தகைய அங்கத்தவர்களின் நடவடிக்கைகளை பொதுக்கூட்டத்தில் உறுதிப்படுத்தும்வரை அவர்களைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கும் அதிகாரம் செயற்குழுவிற்கு உண்டு.

8. செயற்குழுவின் அதிகாரத்திற்குட்பட்டவை பின்வருமாறு.

அ. அமைப்புச் சாசனத்திற்கு உரை கூறுதல். அமைப்புச் சாசனம் வரையறை செய்யாத எந்தப் பொருள்பற்றியும் அவசியம் ஏற்படும்பொழுது தீர்மானித்தல்.

ஆ. சங்கத்தின் நடவடிக்கைகள் அமைப்புச் சாசனத்தின்படி நடந்தேறுவதற்கு வேண்டிய எல்லா வகையான ஒழுங்குகளையும் செய்தல். மேலும் சங்கத்தின் பெயரால் செயல்படுதல், இயங்குதல்.

இ. விதி நான்கு 2ஐ மீறிய எந்த அங்கத்தவரையும் வெளியேற்றுதல் இவ்விதியின்கீழ் செயற்குழுவால் எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் அடுத்த ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்குத் தெரிவிக்கப்படவேண்டும்.

ஈ. சங்கம் திறமாகச் செயல்படுவதற்கு அவசியமான எல்லா உத்தியோகத்தரையும் நியமனம்செய்தல். அவ்வகையில் நியமனஞ்செய்யப்பட்ட உத்தியோகத்தர்களை குழு விரும்பினால் பதவிநீக்கஞ் செய்யலாம்.

உ. குறிப்பிட்ட காரியங்களுக்காக விசேட குழுக்களை அவ்வப்பொழுது நியமித்தல்.

ஊ. இந்த விதிகளின் பிரகாரம் சங்கத்தின் நிதியிலிருந்து செலவுகளை அனுமதித்தல்.

எ. சங்கத்தின் நோக்கங்களைச் செயல்படுத்துவதில் இந்த விதிகளுக்கு முரண்படாத வகையில் நடந்துகொள்ளுதல்.

ஏ. சங்கத்தின் நலன்களைப் பாதிக்கும் வகையில் அந்த ஆண்டில் நேரும் நெருக்கடிகளைச் சமாளித்தல்.

ஐ. சங்கத்தின் சார்பில் நன்கொடைகளை ஏற்றுக் கொள்ளுதல்.

ஒ இரண்டு ஆண்டுப் பொதுக் கூட்டங்களுக் கிடையில் செயற்குழுவில் ஏற்படும் காலி இடங் களை நிரப்புதல்

## உபகுழுக்கள்

### விதி : எட்டு

1. நடனம், நாடகம், இசை, ஓவியமும், சிற்பமும், கவிதை ஆக ஒவ்வொன்றிற்கும் ஒன்று வீதம் ஐந்து உப குழுக்கள் இருக்கும்.

2. அந்தந்தச் செயலாளரைத் தவிர உபகுழுக்களின் இதர அங்கத்தவர்கள் செயற் குழுவால் தெரிந் தெடுக்கப்படுவார்கள்.

3. ஒவ்வொரு உபகுழுவிலும் அதற்குரிய செயலாளர்கள் உட்பட மூன்றுக்குக் குறையாத ஐந்துக்கு மேற்படாத அங்கத்தவர்கள் இருப்பார்கள்.

4. சங்கத்தின் தலைவரும் கௌரவ பொதுச் செயலா ளரும் எல்லா ஐந்து உபகுழுக்களிலும் உத்தியோக பூர்வமான அங்கத்தவர்களாயிருப்பார்கள்.

## பதவி வகிப்போர் கடமைகள்

### விதி : ஒன்பது

1. கௌரவ பொதுச் செயலாளர் : இவர்,

அ. எல்லாக் கூட்டங்களின் நடவடிக்கைகளைப் பதிவு செய்யவும் அப்பதிவுகளை அடுத்துவரும் கூட்டத்தில் வாசிக்கவும் உறுதிப்படுத்தவும் பொறுப்பாயிருப்பார்.

ஆ. சங்கத்தின் பதிவுப் புத்தகங்களையும் மற்றும் சங்கத்திற்குத் தொடர்பான அறிக்கைகளைக் கொண்டிருக்கும் புத்தகங்களையும் ஒழுங்காக வைத்திருப்பதற்குப் பொறுப்பாயிருப்பார்

இ. சங்கத்தின் கடிதப்போக்குவரத்துக்கள் ஒழுங்காக நடைபெறுவதற்குப் பொறுப்பாயிருப்பர்.

ஈ. சங்கத்தின் ஆதரவின்கீழ் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்ச்சிகள் பற்றிய முழு விபரங்களையும் செயற்குழுவிற்குச் சமர்ப்பிப்பார்.

2. கௌரவ உதவிச் செயலாளர் : இவர், மேற்குறிப்பிட்ட காரியங்களில் செயலாளருக்கு உதவியாயிருப்பார்.

3. கௌரவப் பொருளாளர் : இவர்,

அ. சங்கத்திற்குக் கொடுக்கப்பட்ட அல்லது கொடுக்கப்படவேண்டிய தொகைகளையும் பொருளுதவிகளையும் பெற்றுக்கொள்வார். அவை கிடைத்தவுடன் சங்கத்தினால் தெரிவுசெய்யப்பட்ட வங்கிகளில் அடக்கப்பணமாகச் சேர்ப்பார்.

ஆ. அவசியமான கணக்குப் புத்தகங்களையும் சம்பந்தப்பட்ட புத்தகங்களையும் வைத்திருப்பார்.

இ. ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு ஆண்டுக் கணக்கு அறிக்கையைத் தயாரிப்பதற்குப் பொறுப்பாயிருப்பர்.

ஈ. பொருளுதவிகள், சந்தா, மற்றத் தொகைள் வந்தவுடன் அங்கத்தவர்களுக்குப் பற்றுச்சீட்டுக் கொடுப்பதற்குப் பொறுப்பாயிருப்பர்.

4. கௌரவ உதவிப் பொருளாளர் : இவர், மேற்குறிபபிட்ட காரியங்களில் பொருளாளருக்கு உதவியாயிருப்பார்.

5. உபகுழுக்களின் செயலாளர்கள் :

ஐந்து உப குழுக்களின் செயலாளர்களும் அந்தந்தச் செயற்குழுவின் கூட்ட நிகழ்ச்சி விபரங்களைப் பதிவு செய்து கௌரவப் பொதுச் செயலாளர் வேண்டும் பொழுது அவைகளை அவர் பெற்றுக்கொள்ளத் தகுந்ததாக வைக்கவேண்டும்.

## கூட்டங்கள்

விதி : பத்து

1. ஆண்டுப் பொதுக்கூட்டம்

அ. சங்கத்தின் பொதுக்கூட்டம் அக்டோபர் முதல் தேதியிலிருந்து செப்டம்பர் 30ந் திகதியுடன் முடியும் நிதி ஆண்டு முடிவிற்குப்பின் கூடிய விரைவில் ஆனால், அடுத்த ஆண்டு மார்ச் 31ந் திகதிக்குப் பின்போகாமல் கூடவேண்டும்.

ஆ. எல்லா அங்கத்தவர்களுக்கும் ஆண்டுப் பொதுக் கூட்டம் பற்றிய பூர்வாங்க அறிக்கையை குறைந்தது மூன்று வாரங்களுக்கு முன்பு கௌரவ பொதுச் செயலாளர் அனுப்ப வேண்டும்.

இ. ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டிய தீர்மானங்களும் அமைப்பு சாசனத்தைத் திருத்துவதற்குரிய பிரேரணைகளின் அறிவித்தல்களும் பொதுக்கூட்டத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன் கௌரவ பொதுச் செயலாளருக்குக் கிடைக்கும்படி அங்கத்தவர்களால் அனுப்பப்படல் வேண்டும்.

ஈ. மேலே 'இ'யில் சொல்லப்பட்ட தீர்மானங்கள் முதலியவை உட்பட்ட ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலைச் செயற்குழுவைக் கலந்துகொண்டு கௌரவ பொதுச் செயலாளர் தயாரித்து அதை ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்குக் குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்பாவது அங்கத்தவர்களுக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

1. விசேட பொதுக்கூட்டம் :

விசேட பொதுக்கூட்டங்கள் கீழ்க்கண்டபடி நடைபெறவேண்டும்.

அ. தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க அல்லது செயற்குழுவின் தீர்மானத்திற்கிணங்க.

ஆ. சங்கத்தின் 25 அங்கத்தவர்களுக்குக் குறையாதவர்கள் கையொப்பமிட்டு ஒரு மாத அவகாசம் கொடுத்து எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க மேற்படி வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற ஒரு வாரத்திற்குள்ளாக கௌரவ பொதுச் செயலாளர் கூட்டத்தின் நோக்கங்களைக் குறிப்பிட்டு ஒரு கூட்டத்தைக் கூட்டுவார். எழுதப்பட்ட வேண்டுகோள் மேற்படி கூட்டத்தில் கொண்டுவரவிருக்கும் பொருள்பற்றித் தெரிவித்திருக்க வேண்டும் இந்தக் கூட்டத்தில் வேறு பொருள்பற்றி விவாதிக்கக்கூடாது.

இ. நிறைஎண் (கோரம்)

பொதுக்கூட்டத்தின் நிறைஎண் இருபத்தைந்தாகும்.

ஈ. வாக்களிப்பு.

சங்கத்தின் எல்லாக் கூட்டங்களிலும் சமுகமளித்திருக்கும் அங்கத்தவர்கள் இரகசிய வாக்களிப்பு அவசியமென்று தீர்மானித்தாலொழிய கையை உயர்த்துவதன் மூலமே வாக்களிக்கப்படும். ஒவ்வொரு அங்கத்தவரும் விதி ஐந்துக்கு [illegible] ஒருவாக்குக்கு உரிமையுடையவர்

## அமைப்புச் சாசனத்திற்குத் திருத்தங்கள்

### விதி : பதினொன்று

விதிகளுக்குச் சேர்க்கைகளும் விலக்கல்களும் திருத்தங்களும் சங்கத்தின் பொதுக்கூட்டங்களில் மட்டுமே அதுவும் வாக்குரிமையுள்ள அங்கத்தவர்களில் மூன்றிலிருபங்கினரால் அந்தத் திருத்தத்திற்குச் சாதகமாக நேரிலோ அல்லது பதிலர்கள் (Proxy) மூலமோ வாக்களிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பேரிலேயே செய்யப்படும்.

## கலைப்பு

### விதி : பன்னிரண்டு

அந்தக் காரியத்திற்கென்று கூட்டப்பட்ட விசேட பொதுக் கூட்டத்தில் வாக்குரிமையுள்ள அங்கத்தவர்களில் மூன்றிலிரு பங்கினரால் நேரிலோ அல்லது பதிலர்கள் (Proxy) மூலமோ அந்தத் தீர்மானத்திற்குச் சாதகமாக வாக்களிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பேரில் சங்கத்திற்காகச் சட்டப்படி உண்டாக்கப்பட்ட பாக்கிகளைக் கொடுத்துவிட்டுச் சங்கம் கலைக்கப்பட்டு அதன் நிதி தீர்க்கப்படும்.

---

[ஆடி மாதம் 30ம் தேதி (14-8-60) நடந்த ஆரம்பப் பொதுக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு சாசனம்.]

ஸிட்டி பிரஸ்,
22, மலிபான் தெரு,
கொழும்பு 11.